**தமிழ்நாடு அரசு**

**இந்து சமய அறநிலையத்துறை**

**அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்**

**ஆனைமலை நகர் மற்றும் வட்டம்**

**கோவை மாவட்டம்**

**வேலைவாய்ப்பு விளம்பர அறிவிப்பு**

**ந. க. எண். 71 / 2023 நாள். 08.05.2023**

கோவை மாவட்டம், ஆனைமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலில் அமைக்கப்படவுள்ள மருத்துவ மையத்தில் மருத்துவ அலுவலர், செவிலியர் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் பதவிகளில் நியமனம் செய்வதற்காக கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து 11.06.2023 மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதற்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதர விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் மற்றும் திருக்கோயில் இணையத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

| வ எண். | பதவியின் பெயர் | வயது | கல்வித்தகுதி | ஒப்பந்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர் ( Medical Officer ) 2 பதவிகள் | 01.07.2023 அன்று 35 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும் | MBBS ( Qualified ) Registered under TNMC | ரூ.75,000/– |
| 2. | செவிலியர் ( Staff Nurse /MLHP) 2 பதவிகள் | 01.07.2023 அன்று 35 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும் | DGNM ( Diploma In General Nursing Midwife ) | ரூ.14,000/– |
| 3. | பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் ( Multi Purpose Hospital Worker / Attender ) 2 பதவிகள் | 01.07.2023 அன்று 40 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். | 8–ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | ரூ.6,000/– |

## <u>நிபந்தனைகள்</u>

1. இந்து மதத்தை சார்ந்தவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் 01.07.2023 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.
2. தொற்று நோய் உடல் அல்லது மனநிலை குன்றிய குறைபாடுகள், நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள், அரசுப்பணிகள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் வேறு இடங்களில் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
3. நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு உயரதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
4. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும், 11.06.2023–ம் தேதி மாலை 05.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
5. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் அந்தந்த பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதி சான்றுகள் மற்றும் இதர விவரங்களுடன் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
6. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.
7. வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் சரிப்பார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அறிவிப்பு அனுப்பப்படும்.
8. நேரடி நியமனம் இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டவை
9. விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்
10. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்துச் சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். அசல் சான்றிதழ்கள் அனுப்ப கூடாது.
11. ராஜீகத்தாலும் தெய்வீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
12. விண்ணப்பங்களுக்கு கட்டணம் கிடையாது. விண்ணப்பங்களை நேரிலோ அல்லது https://hrce.tn.gov.in என்கிற இணையதள முகவரியில் அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் என்ற பெயரில் உள்ள பக்கத்தில் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
13. விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

உதவி ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்,
ஆனைமலை நகர் மற்றும் வட்டம் , கோவை மாவட்டம் 642 104

இங்ஙனம்

எஸ்.முரளிகிருஷ்ணன்
தலைவர், அறங்காவலர் குழு
நா. தங்கமணி
டி.ஆர். திருமுருகன்
எஸ். எஸ். மஞ்சுளாதேவி
சு.மருதமுத்து
அறங்காவலர்கள்

ரா. விஜயலட்சுமி
உதவி ஆணையர்/செயல்அலுவலர்

இடம் : ஆனைமலை
நாள் : 08.05.2023

| புகைப்படம் |
|---|

## தமிழ்நாடு அரசு– இந்து சமய அறநிலையத்துறை
## அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்
## ஆனைமலை நகர் மற்றும் வட்டம் கோவை மாவட்டம்

விண்ணப்பிக்கும் பணியிடதிற்கான பெயர் :...........................................................................................

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் ( முழுப்பெயர் ) | : | |
| 2. | தந்தை/கணவர்/பாதுகாவலர் பெயர் | : | |
| 3. | நிலையான முகவரி<br><br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 4. | 12 இலக்க ஆதார் அட்டை எண் குறிப்பிடவும்<br><br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 5. | பாலினம் (ஆண்/பெண்) | : | |
| 6. | திருமணம் ஆனவரா | : | |
| 7. | சாதி மற்றும் மதம்<br><br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 8. | பிறந்த தேதி மற்றும் வயது<br><br>(வரிசை எண் 1 மற்றும் 2–ற்கு 18 முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்கள் மற்றும் வரிசை எண்3–க்கு 40 வயதிற்கு உட்பட்டவர்கள் – சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 9. | கல்வித் தகுதி<br><br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |

| | | | |
|---|---|---|---|
| 10. | தொழில் நுட்ப தகுதிகள் உள்ளிட்ட பிற தகுதிகள் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 11. | இதர தகுதிகள் ஏதும் இருப்பின் அதன் விவரம் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 12. | விண்ணப்பிக்கும் பணியில் முன் அனுபவம் இருப்பின் அதன் விவரம்<br>பிற நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 13. | இந்து சமயஅறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் உள்ள முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர் எனில் அதன் விவரம்<br>அ) பெயர் | : | |
| | ஆ) தந்தை / கணவர் பெயர் | : | |
| | இ) பதவி | : | |
| | ஈ) பணியில் சேர்ந்த நாள் | : | |
| | உ) பணிபுரியும் திருக்கோயில் | : | |
| | ஊ) பணிபுரிந்து வருவதற்கான சான்று | : | |
| | எ) நன்னடத்தை சான்று | : | |
| 14. | நன்னடத்தை சான்று<br>அ) இறுதியாக பயின்ற பள்ளி / கல்லூரியில் பெறப்பட்ட சான்று நகல் | : | |

| | | | |
|---|---|---|---|
| | ஆ) அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் ..2023–க்கு பின்னர் பெறப்பட்ட நன்னடத்தை சான்று (நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 15. | குற்றவியல் நடவடிக்கை இருப்பின் அதன் விவரம் (சான்று இணைக்கப்பட வேண்டும்)<br>அ) பதிவு செய்யப்பட்டுள்ளதா ?<br>ஆ) நிலுவையிலுள்ளதா ?<br>இ) தண்டனை வழங்கப்பட்டுள்ளதா ? | : | <br><br>ஆம்/இல்லை<br>ஆம்/இல்லை<br>ஆம்/இல்லை |
| 16. | தொலைபேசி எண் | : | |
| 17. | கைபேசி எண் | : | |
| 18. | மின்னஞ்சல் முகவரி | : | |

**<u>உறுதி மொழி</u>**

.................................................... தந்தை/கணவர்/பாதுகாவலர் பெயர் ......................................................... ஆகிய நான், இவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்காணும் அனைத்து தகவல்களும், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் சரியானவை என உறுதி கூறுகிறேன். எதிர்காலத்தில் மேற்படி தகவல்கள் தவறானவை எனவும், இணைக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனவும் தெரியவந்தால், என்மீது திருக்கோயில் நிர்வாகத்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யவும், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படவும் சம்மதித்து உறுதி அளிக்கிறேன்.

விண்ணப்பதாரர் கையெப்பம்

நாள் :

இடம் :